## பொதுமக்கள், அரசியல் கட்சிகள், அமைப்புகள், ஆர்வமுள்ள தரப்பினர்கள் ஆகியோரிடம் எழுத்துமூலமான கருத்துக்களைக் கோரல்

மாண்புமிகு சனாதிபதியவர்களினால் 2023.10.16 ஆம் திகதிய 2354/06 ஆம் இலக்க மற்றும் 2023.11.02 ஆம் திகதிய 2356/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் நியமனம் செய்யப்பட்ட "தேர்தல்கள் சட்டங்களைத் திருத்துவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு" நல்லாட்சிக் கோட்பாடுகளுக்கு அமைவாக மற்றும் பிரதிநிதித்துவ சனநாயகத்தைப் பலப்படுத்தி சமூகத்தின் நடைமுறைத் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் குறித்த தேர்தல் சட்டங்களை மேலும் திருத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள் பற்றிக் கருத்திற் கொண்டு தகவல் பெற்றுக்கொள்ளல், விசாரணை மற்றும் பரிசோதித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக எழுத்துமூல கருத்துக்கள்/ முன்மொழிவுகளை எதிர்பார்க்கிறது.

இங்கு :

பெண்கள் மற்றும் இளவயதுப் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்; தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து முடிவுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான கால அளவினைக் குறைத்தல்; இலத்திரனியல் வாக்களிப்புக்கு சந்தர்ப்பம் வழங்குதல்; வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கும் வாக்களிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்; ஒரே நபர் மாகாண சபைத் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களிலும் போட்டியிட்டு தெரிவுசெய்யப்படுவாராயின் ஏற்புடைய இரண்டு சபைகளையும் ஒரே நேரத்தில் பிரதிநிதித்துவம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்; தேர்தல் தினத்தன்று சேவைகளை வழங்கும் அரச கூட்டுத்தாபனம் / அரச தொழில்முயற்சிகள் மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கும் தபால்மூலம் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்; மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்தல் தொடர்பில் விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது பல்சமூக தன்மையினையும் கவனத்திற்கொண்டு பல்சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தனிஅங்கத்துவ முறை கலக்கப்பட்ட பொருத்தமான முறை ஒன்றை தயாரித்தல்; பலகட்சி முறையை பலம்பொருந்தச் செய்தல்; அரசியல் கட்சிகளுக்குள் பணத்தின் வகிபாகம் மற்றும் கொள்கைகளின் கைப்பற்றுதலுக்காகவுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல்; அரசியல் கட்சி உறுப்பினர்களிடம் தலைமைத்துவப் பொறுப்பு; தேசிய ஒற்றுமையை வலுவூட்டுவதற்கான அரசியல் கட்சிகளின் கடமைப்பொறுப்புக்கள்;

போன்றே :

அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்பன ஊடக பாவனையை மேற்கொள்ள வேண்டிய முறை; அவர்கள் பொதுப் பணிகளின் போது நடந்துகொள்ள வேண்டிய முறை; அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தல் மற்றும் நம்பகத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் விதமாக அவற்றின் பணிகளை ஆற்றுவதற்கான முறையியல்கள், சட்டவிதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகள் என்பவற்றைத் தயாரிப்பதற்காக **பொதுமக்கள், அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்கள் ஆகியோரிடம் எழுத்துமூல கருத்துக்கள் / முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

- உங்களது பதில்களை 2023.12.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு sec.coi@presidentsoffice.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது அல்லது கடிதவுறையின் இடப்பக்க மேல்மூலையில் "தேர்தல் திருத்தங்கள்" எனக் குறிப்பிட்டு, தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளரின் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும்.

- பதில்கள் கணனி மூலம் தட்டச்சிடப்பட்ட மென்பிரதியாக கிடைக்கப்பெறலானது அவற்றை ஒன்றுதிரட்டுவதனை எளிதாக்கும் என்பதனால் ஏற்புடைய கருத்துக்கள்/ முன்மொழிவுகளை மின்னஞ்சலுக்குரிய பின்னிணைப்பாக (Attachment) மென்பிரதி வடிவில் அனுப்பி வைக்கப்படுவதனை பெரிதும் மதிக்கின்றேன்.

உங்களது பதிலளிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் தகவல்கள் மற்றும் உள்ளடக்கப்படக் கூடிய தனிப்பட்ட தரவுகள் ஏதும் இருப்பின் அவற்றின் இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**செயலாளர்**
தேர்தல்கள் சட்டங்களைத் திருத்துவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான
சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

முகவரி: இலக்கம் 21, SEMA கட்டிடம்
சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

2023.11.15